**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் நவம்பர் மாதம் (22.11.2018) ஆம் நாள் வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர்/2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.419 . பார்வையிடப்பட்டது.**

**பொருள்:2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்/2018 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.420. பார்வையிடப்பட்டது.**

**பொருள். 3**

கூடலூர் நகராட்சியில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு (குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகள் போக எஞ்சிய குடியிருப்புகளுக்கு) UIDSSMT திட்டத்தின் சுழல் நிதியின் கீழ் (Under Revolving Fund of UIDSSMT) TUFIDCO நிறுவனத்தில் கடன் பெற்று "வீட்டு குடிநீர் குழாய் இணைப்பிற்கான உட்புற குழாய் இணைப்புப் பணி மேற்கொள்ளுதல்" (Provision of Internal Plumping for House Service Connection) என்ற அடிப்படையில் நகரில் 2000 குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு திட்ட மதிப்பீடாக **ரூ.70.13** இலட்சம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு கழகத்தால் (**TUFIDCO**) ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் **ரூ.60.72** இலட்சம் வட்டியில்லா கடனாகவும், (Interest Free Loan) எஞ்சிய தொகை **ரூ.9.41** இலட்சத்தினை சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் ம்தர தவிர்க்கவியலாத இனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வரிகளின் மூலம் **(GST and Other Mandatory Provisions)** நகராட்சியே ஈடு செய்து கொள்ள சென்னை, டூஃபிட்கோ நிறுவனத்தின் கடன் அனுமதி கடித எண்.**TUFIDCO/URF/18–19–33 ULBs/AM(M)/2018– நாள் 15.10.2018** இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வட்டியில்லா கடன் மூலம் விடுவிக்கப்படும் தொகை **ரூ.60.72** இலட்சம் போக எஞ்சிய தொகை **ரூ.9.41** இலட்சத்தினை டூஃபிட்கோ நிறுவனம் அறிவுறுத்தியுள்ளவாறு நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும், மேற்படி திட்டப்பணிக்கு தனியாக ஒரு வங்கி கணக்கு துவக்கி பராமரிக்கவும், வட்டியில்லா கடனை (**TUFIDCO**) தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு கழகத்திற்கு திருப்பி செலுத்தும் வரை **(Escrow)** எஸ்க்ரோ வங்கி கணக்கு ஒன்றினை தனியாக துவக்கி, மேற்படி கணக்கு வழியாக அனைத்து வருவாய்களையும் பராமரிக்கவும், மும்முனை ஒப்பந்தம் ஒன்று தயார் செய்து (எஸ்க்ரோ கணக்கு துவக்கப்படும் வங்கி, டூஃபிட்கோ நிறுவனம் மற்றும் நகராட்சி) சமர்ப்பிக்கவும், மேற்படி வட்டியில்லா கடன் பெறுவதற்கு டூஃபிட்கோ நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு நகராட்சி சார்பாக ஆணையர் ஒப்புதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

1. Resolved that Gudalur Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of **Rs.60.72 Lakh (Rupees Sixty lakh and Seventy Two thousand only)** from TUFIDCO for "Providing of Internal Plumping for HSC (Minimum 2000 Nos) for making optimum utilization of Water Supply at Gudalur Municipality" Under Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.

2. The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Gudalur Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Commissioner, Gudalur Municipality.

3. Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

4. Resolved to adhere to time line as envisaged DPR.

5. Resolved that Gudalur Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Gudalur Municipality annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.

6. Resolved that Gudalur Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of loan.

**(ந.க.எண்.570 /2018/ இ2)**

**தீர்மான எண்.421 .அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 4**

கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 ன் கீழ் திடக்கழிவு மேலான்மை பணியான **BIO MINING** பணி குறித்த ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தென்னக அளவிளாள செய்தி மலரில் விளம்பரம் செய்தமைக்காக தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அக்காரட் அட்வர்டைசிங் ஏஜன்சீஸ் அவர்களுக்கு விளம்பரக் கட்டணத் தொகை **ரூ.1,37,025**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.945/2018/ இ1)**

**தீர்மான எண்.422.அனுமதிக்கப்பட்டது.**
**பொருள். 5**

கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 ன் கீழ் திடக்கழிவு மேலான்மை திட்டத்தின் கீழ் 10 எண்ணம் பேட்டரி வாகனங்கள் வாங்கும் பணிக்குரிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கு செய்தி மக்கள் தொடர்புத்துறை , மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் ,தேனி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான மக்கள் குரல் பத்திரிக்கை நிறுவனத்தாருக்கு ஒப்பந்தபுள்ளி குறித்த அறிவிப்பினை விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணம் **ரூ.15,397**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.945/2018/ இ1)**

**தீர்மான எண்.423.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள். 6**

கூடலூர் நகராட்சி அலுவலக தனி அலுவலர் (ம) ஆணையாளர் அவர்களுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண்-TN-60 R-6378-ற்கு ஆயில் சர்வீஸ் மற்றும் சிறு பழுதுகள் நீக்கம் செய்வதற்கு 14.09.18 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்வாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளில் மன்றத்தின் பார்வைக்கு பரீசிலைனைக்கும் .

| வ.எண் | நிறுவனத்தாரின் பெயர் | தொகை<br>ரூ |
|---|---|---|
| 1. | பி.எஸ்.பி மோட்டாடாஸ் கம்பம் | ரூ.7040/- |
| 2. | அகரம் மோட்டார்ஸ் கம்பம் | ரூ.6440/- |
| 3. | ஏ.ம்.மோட்டார்ஸ் கம்பம் | ரூ.6780/- |

**அலுவலக குறிப்பு**:-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் அகரம் மோட்டர்ஸ் கம்பம் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம் அவசரம் அவசியம் கருதி மேற்படி நிறுவனத்தரின் மூலம் பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்
3. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.701/2016/ இ1)**

**தீர்மான எண்.424. குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 ன் கீழ் திடக்கழிவு மேலான்மை பணியான நுண் உரம் செயலாக்க மையம் அமைத்திடும் பணிக்குரிய ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடுவதற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்சீஸ் எனும் நிறுவனத்தாருக்கு ஒப்பந்தபுள்ளி குறித்த அறிவிப்பினை விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக்கட்டணம் **ரூ.67,358**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.945/2018/ இ1)**

**தீர்மான எண்.425.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கூடலூர் நகராட்சியில் பகுதிகளில் உள்ள அனைத்து வார்டுகலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்வதற்க்குரிய இயந்திரம் பொருத்துவதற்கு வெளியிடப்பட்ட ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்சீஸ் அவர்களுக்கு விளம்பரக்கட்டணத்தொகை **ரூ.1,15,343**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.1732/2018/ இ1)**

**தீர்மான எண்.426.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சியில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டம்-2018-19ன் கீழ் நடைபெற உள்ள சாலை பணிகள் குறித்த ஒப்பந்தபுள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜன்சீஸ் அவர்களுக்கு விளம்பரக்கட்டணத்தொகை **ரூ.57,383**/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.1427/2018/ இ1)**

**தீர்மான எண்.427.அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.355 நாள் 29.06.2018 ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள 11.10.2018 ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கூடலூா் நகராட்சி வாா்டு எண் 13ல் அமைந்துள்ள மேல்நிலைநீா் தேக்க தொட்டியிலிருந்து வாா்டு எண்-11ல் உள்ள பகுதிகளுக்கு குடிநீா் விநியோகம் செய்வதற்கு குமுளி நெடுஞ்சாலையில் பெட்ரோல் பல்க் அருகில் உள்ள பாலம் முதல் ஞானியா் கோனாா் தெரு சந்திப்பு வரை பகிா்மான குழாய் அமைத்தல் | 1.80 | திரு.டி.சித்திரேசன் | 0.03% | – |
| | | | திரு. கே.வனராஜ் | – | 0.16% |

**அலுவலகக் குறிப்பு : – 1)** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **0.03 %** குறைவாக கொடுத்துள்ள**திரு.டி.சித்திரேசன்**அவா்களின்குறைந்தஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**(ந.க.எண்.1356/2018/ இ1)**

**தீா்மான எண்.428. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.11**

கூடலூா் நகராட்சிக்கு **தமிழ்நாடு நகா்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2018-19 (TURIP-2018-19)**-ன் கீழ் சென்னை, நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.12981/2018/இ1,நாள்.02.08.2018** ன்படி, கீழ்கண்ட பணிகளுக்கு **ரூ. 185.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.அதன் விபரம்

| **வ எண்** | **பணிகளின் விபரம்** | **மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | கூடலூா் நகராட்சியில் வாா்டு எண்-13,பெருமாள் கோவில் சாலை மற்றும் வாா்டு எண்-21 பழியன்குடி சாலைக்கு CMP முறையில் தாா் சாலை அமைத்தல். **(சிப்பம் எண்.1)** | **185.00** |

மேற்கண்ட பணிக்கு சென்னை நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.12981/2018/இ1,நாள்.02.08.2018.** ன்படி நிா்வாக அனுமதியும், சென்னை, நகராட்சி நிா்வாக ஆணையா் அலுவலக தலைமை பொறியாளா் அவா்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.2038/2018/DO2 நாள்.18.09.2018.** ன்படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிகளுக்கு **31.10.2018 ஆம்** நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒவ்வொரு சிப்பத்திற்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம்

**சிப்பம் எண் -1**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சபீர்அலி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 7.06 சதவீதம் அதிகம் |

மேற்கண்டவாறு சிப்பம் எண்-1க்கு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **31.10.2018** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)**சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி **(Price Bid) 02.11.2018** அன்று திறக்க அறிவிப்பு வழங்கப்பட்டது. **02.11.2018 ஆம் நாளா**ன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் சிப்பம் எண்-1க்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.99%** கூடுதலான விலை விகிதத்தில் **திரு.ஆர்.சபீர்அலி.** அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரக்கு **02.11.2018 ஆம்** நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பபட்டதின் பெயரில் **சிப்பம் எண்-1** க்கு **திரு.ஆர்.சபீர்அலி** .அவர்கள் வேலை ஆட்கள் கூலி உயர்வு, மணல் மற்றும் கட்டுமான பொருட்கள் விலை உயர்வின் காரணமாக **4.99%** கூடுதாலன விலை விகிதத்தில் இருந்து விலை குறைப்பு செய்துதர இயலாது என்று **09.11.2018 ஆம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண் -1**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சபீர்அலி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.99 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 7.06 சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:– 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை

விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. **சிப்பம் எண்** -1க்கு மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.99%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **திரு.ஆர்.சபீர்அலி.** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1427/2018/ இ1)**

**தீர்மான எண்.429. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.12

கூடலூர் நகராட்சிக்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2018-19 (TURIP- 2018-19)**-ன் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.12981/2018/இ1,நாள்.02.08.2018** ன்படி, கீழ்கண்ட பணிகளுக்கு **ரூ. 150.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.அதன் விபரம்

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண். 17ல் இராஜீவ் நகர் குறுக்கு தெரு,ஓம் சக்தி நகர் குறுக்கு தெரு,வார்டு எண்-4 சிங்கபெருமாள் தேவர் சந்து மற்றும் வார்டு எண்-13 தம்மணம்பட்டி குறுக்கு தெருக்களில் மழை நீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைத்தல், வார்டு எண். 8ல் காந்தி கிராமம் தெற்கு தெரு மற்றும் வார்டு எண். 10ல் காமாட்சியம்மன் கோவில் தெருவில் மழை நீர் வடிகால் மற்றும் CMP முறையில் தார்தளம் அமைத்தல் **(சிப்பம் எண்.2)** | **150.00** |

மேற்கண்ட பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.12981/2018/இ1,நாள்.02.08.2018.** ன்படி நிர்வாக அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.2038/2018/DO2 நாள்.18.09.2018.** ன்படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிகளுக்கு **31.10.2018 ஆம்** நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒவ்வொரு சிப்பத்திற்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம்

**சிப்பம் எண் -2**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சபீர்அலி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 6.27 சதவீதம் அதிகம் |

மேற்கண்டவாறு சிப்பம் எண்-2க்கு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **31.10.2018** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)**சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி **(Price Bid) 02.11.2018** அன்று திறக்க அறிவிப்பு வழங்கப்பட்டது. **02.11.2018 ஆம் நாளா**ன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் சிப்பம் எண்-2க்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.98%** கூடுதலான விலை விகிதத்தில் **திரு.ஆர்.சபீர்அலி.** அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரக்கு **02.11.2018 ஆம்** நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பபட்டதின் பெயரில் **சிப்பம் எண்-2** க்கு **திரு.ஆர்.சபீர்அலி** .அவர்கள் வேலை ஆட்கள் கூலி உயர்வு, மணல் மற்றும் கட்டுமான பொருட்கள் விலை உயர்வின் காரணமாக **4.98%** கூடுதாலன விலை விகிதத்தில் இருந்து விலை குறைப்பு செய்துதர இயலாது என்று **09.11.2018 ஆம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண் -2**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சபீர்அலி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.ஏ.பி.கன்ஸ்ட்ரக்சன்ஸ் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 6.27 சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:– 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. **சிப்பம் எண் -2**க்கு மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.98%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **திரு.ஆர்.சபீர்அலி.** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1427/2018/ இ1)**

**தீர்மான எண்.430. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சிக்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2018-19 (TURIP-2018-19)**-ன் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.12981/2018/இ1,நாள்.02.08.2018** ன்படி, கீழ்கண்ட பணிகளுக்கு **ரூ. 165.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.அதன் விபரம்

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண். 13ல் கழுதை மேடு சாலை, வார்டு எண். 8ல் நடுத்தெரு மற்றும் வார்டு எண்-18 ஆசாரிமார் தெரு, வார்டு எண். 3ல் கள்ளர் கிழக்கு புதுத் தெரு மற்றும் கீழக்கூடலூர் கம்போஸ்ட் தெரு ஆகியவற்றில் CMP முறையில் தார்தளம் மற்றும் வார்டு எண். 21ல் மயான சாலையில் CMP முறையில் தார்தளம் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் தார்தளம் அமைத்தல் **(சிப்பம் எண்.3)** | **165.00** |

மேற்கண்ட பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.12981/2018/இ1,நாள்.02.08.2018.** ன்படி நிர்வாக அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.2038/2018/DO2 நாள்.18.09.2018.** ன்படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிகளுக்கு **31.10.2018 ஆம்** நாள் மின்னனு

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒவ்வொரு சிப்பத்திற்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம்

**சிப்பம் எண் -3**

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.பரமாநந்தன் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.95 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.வேல்மணி. கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஆண்டிபட்டி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.56 சதவீதம் அதிகம் |

மேற்கண்டவாறு சிப்பம் எண்-3க்கு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **31.10.2018** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)**சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி **(Price Bid) 02.11.2018** அன்று திறக்க அறிவிப்பு வழங்கப்பட்டது. **02.11.2018 ஆம் நாளா**ன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் சிப்பம் எண்-3க்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.95%** கூடுதலான விலை விகிதத்தில் **திரு.ஆர்.பரமாநந்தன்.** அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரக்கு **02.11.2018 ஆம்** நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பபட்டதின் பெயரில் **சிப்பம் எண்-3** க்கு **திரு.ஆர்.பரமாநந்தன்**..அவர்கள் வேலை ஆட்கள் கூலி உயர்வு, மணல் மற்றும் கட்டுமான பொருட்கள் விலை உயர்வின் காரணமாக **4.95%** கூடுதாலன விலை விகிதத்தில் இருந்து விலை குறைப்பு செய்துதர இயலாது என்று **09.11.2018 ஆம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சிப்பம் எண் -3**

| **வ. எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம்** |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.பரமாநந்தன் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.95 சதவீதம் அதிகம் |
| 2, | திருவாளர்கள்.வேல்மணி. கன்ஸ்ட்ரக்சன்ஸ், ஆண்டிபட்டி | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.56 சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:— 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை

விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. **சிப்பம் எண் -3**க்கு மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.95%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **திரு.ஆர்.பரமாநந்தன்.** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1427/2018/ இ1)**

**தீர்மான எண்.431. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.14**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படியும், நிலைகளின் படியும் நகராட்சி இளநிலை உதவியாளர், தட்டச்சர், புள்ளி விவரத்தொகுப்பாளர் மற்றும் இரவு காவலர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சியின் நிலைகளுக்கு ஏற்றவாறு கூடலூர் நகராட்சிக்கு பணியிடங்கள் தேவைப்படுகிறது. கூடலூர் நகராட்சியானது ,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(நநி 5) துறை, அரசாணை நிலை எண் 154 நாள் 09.08.2010ன்படி,இரண்டாம் நிலை நகராட்டசியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இணை ஆணையர் (நிாவாகம்) ,நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்ளின் கடித ந.க.எண் 15891/2016/எச்1 நாள் 19.04.2017 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க,இரண்டாம் நிலை நகராட்சி தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி கீழ்க்கண்ட பணியிடங்கள் தேவைப்படுகிறது.

| வ.எண் | தேவையான பணியிடங்கள் | எண்ணிக்கை | ஊதியவிகிதம் |
|---|---|---|---|
| 1 | இளநிலை உதவியாளர் | 2 | Matrix Level 8, Pay Progress Rs.19500–62000<br>(முந்தைய ஊதிய விகிதம்<br>PB1 .5200–20200+2400GP) |
| 2 | தட்டச்சர் | 2 | Matrix Level 8, Pay Progress Rs.19500–62000<br>(முந்தைய ஊதிய விகிதம்<br>PB1 .5200–20200+2400GP |
| 3 | புள்ளி விவரத்தொகுப்பாளர் | 1 | Matrix Level 11, Pay Progress Rs.35400–112400<br>(முந்தைய ஊதிய விகிதம்<br>PB2 .9330–34800+4200GP |

| | | | |
|---|---|---|---|
| 4 | இரவு காவலர் | 1 | Matrix Level 1, Pay Progress Rs.15700-50000<br>(முந்தைய ஊதிய விகிதம்<br>PB1A 4800–10000+1300GP |

மேற்கண்ட தேவையான பணியிடங்கள் தோற்றுவிக்கும்பட்சத்தில், பணியாளர்கள் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் செலவீனம் 49 சதவிகிதத்ற்கி மேல் உள்ளது. எனவே, மேற்கண்ட பணியிடங்களை தோற்றுவிக்க உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ,மதுரை அவர்கள் மூலமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். ( கூடலூர் நகராட்சியின் வருவாயை விட பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் செலவீனம் 49 சதவிகிதத்திற்கு மேல் உள்ளது)

**தீர்மான எண்.432. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

அரசாணை எண்: 212 நிதித்துறை (ஓய்வூதியம்) நாள் 19.07.216ன்படி, குழுகாப்பீடு திட்டத்தின் கீழ் உள்ள பணியாளர்களின் மாத ஊதியத்தில் சந்தா தொகை ரூ.60/–ம், நகராட்சி பங்குத்தொகை ரூ.165/–ம் குழுக்காப்பீட்டு கணக்கில் செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாணை 01.02.2016 முதல் நடைமுறைக்கு வந்தது. ஆனால் இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு 02/2016 மதல் 07/2016முடிய நகராட்சி பங்குத்தொகை ரூ.55/–வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மீதம் செலுத்த வேண்டிய நகராட்சி பங்குத்தொகை ரூ.110/– வீதம் ரூ.55330/– குழுக்காப்பீட்டு கணக்கில் செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.433. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்கன்குனியா, பன்றிக் காய்ச்சல் போன்ற கொசுக்களினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்த நிலவேம்பு குடிநீர் அனைத்து பொதுமக்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகளுக்கு வழங்க வேண்டியுள்ளதால் 200 கிலோ நிலவேம்பு பவுடர் கொள்முதல் செய்ய தோராயமாக உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் 2462/2018/எச்1)**

அலுவலகக்குறிப்பு

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.434. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.17**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்கன்குனியா, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த இரண்டு புதிய (Pulse Fog) Super Fog Machine (Indoor) கொள்முதல் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ200000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க. எண். 2462/2018/எச்1**

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.435. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.18**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு, சிக்கன்குனியா, பன்றிக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த 5 Mini Fogging Machine (Indoor) அதற்குத் தேவையான 1000 எண்ணிக்கை சிலிண்டர் கொள்முதல் செய்வதற்கு உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ3,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க. எண் 2462/2018/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**
மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண்.436. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.19**

கூடலூர் நகராட்சியில் கோடைகாலத்தில் உண்டாகும் குடிநீர் பிரச்சினைகளை சரிசெய்யும் பொருட்டு 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட டிராக்டர் டிரய்லர் டேங்கர் ஒன்று புதிதாக வாங்குவதற்கும், அதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.3,25,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள்.20

நகராட்சியில் அலுவலகங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் அடையாள அட்டை அணிய வேண்டும் என்று சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்ப்படி இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் அடையாள அட்டை தயார் செய்து வழங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.25,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.438. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.21

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016– ஐ கடைபிடிக்கவும், திடக்கழிவுகளை தரம் பிரித்து பொதுமக்கள் வழங்கக் கோரியும், ஒரு முறை பயன்படுத்தும் நெகிழிப் பொருட்களை தவிர்த்திடவும், டெங்கு கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை தவிர்த்திடும் பொருட்டும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி இனங்களை குறித்த காலத்தில் செலுத்திடக் கோரியும் கீழ்க்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் பிரசுரித்தமைக்கு பட்டியல் தொகை ரூ68958/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண் 2765/2018/எச்1)**

| வ .எண் | நாளிதழ் விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | மாலைமலர் தீபாவளி மலர் –2018 | ரூ7980 |
| 2 | தினமலர் தொழில் வர்த்தக மலர் – 2018 | ரூ11812 |
| 3 | தினகரன், தொழில் மலர்–2018 | ரூ 13650 |
| 4 | தினத்தந்தி நாளிதழ் | ரூ35516 |
| | **மொத்தம்** | **ரூ68958** |

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசிய அவசரம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.439 .அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.22

இந்நகர்ப்பகுதியில் பொதுசுகாதாரப்பிரிவின் கீழ் டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ள 29 துப்புரவு பணியாளர்களை நியமித்து பணிகள் செய்திட நகர்மன்றத் தீர்மான எண் 340 நாள் 30.06.2018 ல் ரூ25,23,000/–க்கு அனுமதி பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 19.9.2018 ம் தேதிய செயல்முறைகள் உத்திரவுப்படியும் ஒ.மு எண்13433/2018/கே1 நாள் 17.09.2018ன்படியும் 1 DBC பணியாளருக்கு 300 வீடுகள் வீதம் 11685/300 =39 DBC பணியாளர்களை நியமிக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே 29 DBC களப்பபணியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் கூடுதலாக 10 டெங்கு களப் பணியாளர்களை அக்டோபர் 2018 முதல் மார்ச் 2019 வரை பணிசெய்திட உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ9,50,000/.க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் 2086/2018/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.440. அனுமதிக்கப்பட்டது.**

பொருள்.23

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவின் கீழ் இயங்கும் TN 60 Y8120 டிப்பர் லாரிக்கு இன்சீரன்ஸ் தொகை ரூ31,531/–ஐ 2018–19 ஆம் ஆண்டிற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், கம்பம் நிறுவனத்திற்கு காசோலையாக செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க எண் 2086/2018/எச்1)**

**அலுவலகக்குறிப்பு**
1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்காணும் செலவீனத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.441. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கனிணிகள் மற்றும் பிரிண்டர்களையும் பழுது நீக்கம் செய்யும் பணிக்கு செய்வதற்கு **11.10.2018** ம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலை விபரம் | விலைபுள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| | | LUCKY COMPUTERS | RUBI COMPUTERS | REKA COMPUTERS |
| 1. | நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கனிணிகள் மற்றும் பிரிண்டர்களையும் பழுது நீக்கம் செய்தல். | ரூ.10,850 | ரூ.11,600 | ரூ.15,830 |
| | மொத்தம் | ரூ.10,850 | ரூ.11,600 | ரூ.15,830 |

**அலுவலகக் குறிப்பு: –** 1) வரப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் ரூ.10,850/–க்கு குறைந்த விலைபுள்ளி கொடுத்துள்ள LUCKY COMUTERS,THENI அவர்களின் விலைப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.442. குறைந்த விலைப்புள்ளி அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:25**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான டம்பர் பிளேசர் பின்கள் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.10,00,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.443. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:26**

கூடலூர் நகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்ட பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு சாலைகள் மற்றும் தெருக்களை அளவீடுகள் மேற்கொள்ள RODOMETER புதிது வாங்குவதற்கும் ஏற்கனவே பழுதடைந்துள்ள RODOMETER ஐ பழுதுநீக்கம் செய்யவும் உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.7,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.444 .அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:27**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள பழுதடைந்த பழைய தள்ளுவண்டிகள், டிரை சைக்கிள்கள் மற்றும் பழைய டயர்கள் ஆகியவற்றினை ஏலம் விட்டு அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.445. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:28**

கூடலூர் நகராட்சியில் சொத்துவரி சீராய்வு பணிகள் நடைபெற்று வருகிறது சொத்துவரியினை வரி உயர்வு செய்யும் பணிகளை கணினி மூலம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேற்படி பணிகளை மேற்கொள்ள தேவையான இரண்டு கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்குவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.1,50,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.446. அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:29**

கூடலூர் நகராட்சிக்கு **திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19 (SBM-SWM 2018-19)**-ன் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.22866/2018/பி3, நாள். 23.08.2018** ன்படி, கீழ்கண்ட பணிக்கு **ரூ. 389.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது,அதன் விபரம்

| வ எ ண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | Removal of the legacy waste of 59110 cu.m through Bio Mining process to Reclaim the existing dump yard located at Ward No.10 Pethuklam in Gudalur Municiplity | **389.00** |

மேற்கண்ட பணிகளுக்கு சென்னைநகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின்

செயல்முறை ஆணை **22866/2018/பி3, நாள். 23.08.2018** ன்படி நிர்வாக அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.18281/2018/DO2 நாள்.05.09.2018.** ன் படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட பணிகளுக்கு **28.09.2018** ம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.அதன் விபரம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S.Srinivasa Waste Management Services,Pvt.Ltd.Chennai. | மதிப்பீட்டு தொகைக்கு **(+) 11.89** சதவீதம் அதிகம் |
| 2 | Walajapet Agro Engineering Services Co-Op Center Ltd, Walajapet. | மதிப்பீட்டு தொகைக்கு **(+) 12.68** சதவீதம் அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **28.09.2018** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)**சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி **(Price Bid) 22.10.2018** அன்று திறக்க அறிவிப்பு வழங்கப்பட்டது. **22.10.2018-ம்** நாள் அன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் **Removal of the legacy waste of 59110 cu.m through Bio Mining process to Reclaim the existing dump yard located at Ward No.10 Pethuklam in Gualur Municipality** பணிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **11.89%** கூடுதலான விலை விகிதத்தில் **M/S.Srinivasa Waste Management Services,Pvt.Ltd.Chennai.** அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார். மேற்படி ஒப்பந்ததாரக்கு **22.10.2018**ம் நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பபட்டதின் பெயரில் **M/S.Srinivasa Waste Management Services,Pvt.Ltd.Chennai** அவர்கள் **11.89%** கூடுதாலன விலை விகிதத்தில் இருந்து **4.95%** ஆக விலை குறைப்பு செய்து **29.10.2018 ம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம்

கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/S.Srinivasa Waste Management Services,Pvt.Ltd.Chennai. | மதிப்பீட்டு தொகைக்கு **(+) 4.95** சதவீதம் அதிகம் |
| 2, | Walajapet Agro Engineering Services Co-Op Center Ltd, Walajapet. | மதிப்பீட்டு தொகைக்கு **(+) 12.68** சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:– 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது.மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.95%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **M/S.Srinivasa Waste Services Management, Pvt.Ltd.Chennai.**அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.447. குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்:30**

கூடலூர் நகராட்சியில் நகராட்சி அலுவலக பயன்பாட்டில் இருந்து வரும் 5 KVA ONLINE UPS னை சோலார் பேட்டரிகள் உள்ள அறைக்கு மாற்றிடவும் மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து கணினிகளுக்கும் தனியே UPS வயரில் செய்திடவும் உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.1,50,000**/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.448 .அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:31**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-6 ல் அருந்ததியர் ஓடையில் K.G.பட்டி சாலையின் பக்கவாட்டில் சேதமடைந்த நிலையில் உள்ள தடுப்புச்சுவரினை புதிதாக அமைத்து ஏற்கனவே உள்ள தடுப்புச்சுவரினை உயர்த்தி அமைத்திடவும் கைப்பிடிச்சுவர்கள் அமைக்கவும் மற்றும் சிறுபாலம் அமைத்து பெண்கள் கழிவறை முதல் K.G.பட்டி சாலை வரையில் பேவர் பிளாக் சாலை அமைத்திடவும் **ரூ.8,30,000**/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.449 .அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்:32**

அகவிலைப்படி 7% லிருந்து 9 % ஆக உயர்வு செய்து வரப்பெற்ற அரசாணை நிதி (படிகள்) துறை எண்–313 நாள்.18.09.2018 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:-**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.450. பார்வையிட்டு பதியப்பட்டது.**

**பொருள்:33**

அரசாணை (எம்.எஸ்) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(எம்.எஸ்) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018–இன் படி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, அட்டவணை நாளில் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கூடலூர் நகராட்சி சொத்துவரியினை 1.04.2018 முதல் பொதுசீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு சொத்து உரிமையாளர்/ குடியிருப்போர்/ குத்தகைதாரர் சமர்ப்பிக்கும் சொத்துவரி சுயமதிப்பீட்டு விவர அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாக கொண்டு இருக்கும். மேலும் இந்நகர்மன்ற தீர்மான எண்.377, நாள். 20.08.2018 இன்படி மண்டல அடிப்படை மதிப்பு **(ZONAL VALUE)** 1.04.2018 முதல் உயர்வு செய்ய உத்தேசிக்கப்பட்டு **(A,B,C)** என மூன்று மண்டலங்களாக தெருக்கள் பிரிக்கப்பட்டு அதற்குரிய மண்டல மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மக்கள்குரல் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான **(BRIGHT ADVERTISING)** தொகை. ரூ.18,144/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.1616/2018/அ1)**

**அலுவலக குறிப்பு:-**

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.451. அனுமதிக்கப்பட்டது.**

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்
கூடலூர் நகராட்சி